செ.வெ.எண்: 83 நாள்: 30.01.2017

# தமிழ்நாடு சுகாதாரத்துறையில் இந்தியாவில் முதல் மாநிலமாக திகழ்கிறது - மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் பெருமிதம்.

புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி வட்டம், மேலத்தானியத்தில் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துதுறையின் சார்பில் புதிய அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தினை தேசிய நலவாழ்வு திட்டக்குழும இயக்குநர் மரு.தரேஷ்அகமது,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தலைவர் திரு.பி.கே.வைரமுத்து அவர்கள், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் ஆகியோர் திறந்து வைத்தார்கள்.

இந்த புதிய ஆரம்ப சுகாதார நிலையத்தினை தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தலைவர் அவர்கள் திறந்து வைத்து பேசியதாவது:

தமிழகஅரசு பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறது. இதன்படி பொதுமக்கள் நோயற்ற வாழ்வு வாழும் வகையில் இப்பகுதி பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையினை ஏற்று புதிய அரசு ஆரம்ப சுகாதார நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. மேலும் திருமயம் சட்டமன்ற தொகுதியில் குழிபிறை, கல்லூர் மற்றும் மேலத்தானியம் ஆகிய 3 கிராமங்களில் புதிய அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க தமிழகஅரசிடம் கோரிக்கை வைக்கப்பட்டு இதில் மேலத்தானியம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இப்பகுதியை சேர்ந்த பொதுமக்கள் தங்களுக்கு தேவையான பல்வேறு மருத்துவ வசதிகளை பெற்று பயன்பெறலாம் என்றும் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தலைவர் திரு.பி.கே.வைரமுத்து அவர்கள் பேசினார்.

இந்த புதிய அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் அவர்கள் திறந்து வைத்து பேசியதாவது:

தமிழகஅரசு பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறது. இதன்படி பொதுமக்கள் அன்றாடம் தங்களுக்கு ஏற்படும் நோய்களை தீர்க்கும் வகையில் உரிய சிகிச்சை பெறுவதற்கு மேலத்தானியம் பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையினை ஏற்று துணை சுகாதார நிலையம், புதிய அரசு ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்தப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்த புதிய அரசு ஆரம்ப சுகாதார நிலையம் ஒரு மருத்துவர், இரண்டு செவிலியர்கள், ஒரு மருந்தாளுநர், ஒரு உதவியாளர் மற்றும் பல்வேறு மருத்துவ உபகரணங்களை கொண்டு சிறப்பாக செயல்படும். பொதுமக்கள் தங்களுக்கு தேவையான பல்வேறு சிகிச்சைகளை புதிய அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் பெற்று பயன்பெறலாம். மேலும் காரையூர் அரசு ஆரம்ப சுகாதாரநிலையம் 30 படுக்கைகள் கொண்டு தரம் உயர்த்தப்பட்டதுடன், நச்சாந்துப்பட்டி அரசு ஆரம்ப சுகாதாரநிலையமும் தரம் உயர்த்தப்பட்டுள்ளது. பொன்னமராவதி அரசு மருத்துவமனை தாலுகா மருத்துவமனையாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. மேலத்தானியம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் புதிய கட்டிடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும் தமிழகஅரசின் இத்தகைய சிறப்பான நடவடிக்கையின் மூலம் தமிழ்நாடு சுகாதாரத்துறையில் இந்தியாவில் முதல் மாநிலமாக திகழ்கிறது என்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் பொது சுகாதார துறை இயக்குநர் மரு.குழந்தைசாமி, மருத்துவ உயர்க்கல்வி இயக்குநர் மரு.நாராயணபாபு, பொது சுகாதார துறை கூடுதல் இயக்குநர் மரு.சித்ரா, இணை இயக்குநர் மரு.தாமரைச்செல்வி, சுகாதாரப்பணிகள் துணை இயக்குநர்கள் மரு.பரணீதரன் (புதுக்கோட்டை), மரு.கலைவாணி (அறந்தாங்கி), வருவாய் கோட்டாட்சியர் திரு.வடிவேல்பிரபு, கூட்டுறவு சங்கத்தலைவர் திரு.பழனியாண்டி, மருத்துவர்கள், செவிலியர்கள், முன்னாள் உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள், கூட்டுறவு சங்கத்தலைவர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**